*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை - 4*
*04 02 2026 WEDNESDAY 6 30 PM*
*வணக்கம் - மாநிலச் செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1) விவசாயிகளின் நலனுக்கு எதிரான எந்தவொரு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்று மத்திய அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

2) தமிழகத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு ரயில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3) திமுக, பிரிவினை அரசியலை கடைபிடித்து வருவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

4) டாஸ்மாக் பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முதலமைச்சர் முன்வர வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் மற்றும் இடதுசாரி கட்சிகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

5) ஆசிய துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>><<<<<

விவசாயிகளின் நலனுக்கு எதிரான எந்தவொரு ஒப்பந்தத்தையும் மத்திய அரசு மேற்கொள்ளாது என்று வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தம் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்படமாட்டார்கள் என்று திட்டவட்டமாக தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தம் குறித்து எதிர்க்கட்சிகள் தவறான தகவல்களை பரப்பி வருவதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் குற்றம் சாட்டினார்.

>>>>><<<<<

அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ், நாடுமுழுவதும் ஆயிரத்து 337 ரயில் நிலையங்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், இந்த திட்டத்தின் கீழ் 172 ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

மாற்றுத்திறனாளிகளுக்கான வசதியை உள்ளடக்கியதாக இந்த மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழகத்தின் ரயில்வே திட்டங்களுக்கு மத்திய பட்ஜெட்டில் 7 ஆயிரத்த 611 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, ஒதுக்கிய நிதியை விட இது ஒன்பது மடங்கு அதிகமாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

சென்னையிலிருந்து பெங்களூரு மற்றும் ஹைதராபாதிற்கு புல்லட் ரயில் வழித்தடங்கள் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், தமிழகத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு ரயில்வே கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதற்காக, தமிழக மக்கள் சார்பில் பிரதமருக்கும், ரயில்வே அமைச்சருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

>>>>><<<<<

மக்கள் தொகை கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக நடத்தப்படும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த உள்துறை இணையமைச்சர் திரு. நித்யானந்த் ராய், முதல்கட்டமாக வீடுகள் கணக்கெடுக்கும் பணி நடைபெறும் என்று கூறினார்.

மக்கள் தொகை கணக்கெடுக்கும் பணியாளர்கள் வீடுதோறும் சென்று இப்பணியை மேற்கொள்வார்கள் என்று அவர் தெரிவித்தார்.

டிஜிட்டல் முறையில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு. நித்யானந்த் ராய் கூறினார்.

>>>>><<<<<

பிரதமரின் இல்லந்தோறும் சூரியமின் சக்தி திட்டத்தின் கீழ், இதுவரை 26 லட்சம் குடியிருப்புகள் பயனடைந்திருப்பதாக மத்திய இணையமைச்சர் திரு. ஸ்ரீபத் யஸோ நாயக் கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், தமிழகத்தில் மட்டும் 59 ஆயிரத்து 517 குடியிருப்புகள் இந்த திட்டத்தின் கீழ் பயனடைந்திருப்பதாக கூறினார்.

>>>>><<<<<

குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துள்ள உணவினை வழங்க வேண்டியதன் அவசியத்தை மாநில அமைச்சர் திருமதி. கீதா ஜீவன் வலியுறுத்தியுள்ளார்.

இன்று தூத்துக்குடியில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசினார்.

பெண்கள் தங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான இரண்டாம் கட்ட வாக்குறுதிகளை அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி இன்று சென்னையில் வெளியிட்டார்.

- ஜல்லிக்கட்டுப் போட்டிகளின் போது எதிர்பாராதவிதமாக உயிரிழக்கும் மாடுபிடி வீரர்களின் குடும்பத்தினருக்கு 10 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்,
- வங்கிகளில் பெற்ற கல்விக் கடன் தள்ளுபடி செய்யப்படும் என்றும், அந்த தொகையை அரசே ஏற்கும்,

- அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஆண்டுக்கு 3 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விலையில்லாமல் வழங்கப்படும்

-போன்ற அறிவிப்புகள் இதில் இடம்பெற்றுள்ளன.

>>>>><<<<<

திமுக பிரிவினை அரசியலை கடைபிடித்து வருவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநில அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மதுராந்தகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வடஇந்தியர்களுக்கு எதிராக தெரிவித்த கருத்துக்கள் வன்மையாக கண்டிக்கத்தக்கது என்று தெரிவித்தள்ளார்.

இதற்காக, மக்களிடம் அமைச்சர் மன்னிப்பு கோர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வடஇந்தியர்கள் மீதான வெறுப்புணர்வை திமுக தலைவர்கள் விதைக்க முயல்வது அருவருக்கத்தக்கது என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

திமுகவின் இந்த செயலை, அதன் கூட்டணிக் கட்சிகளான காங்கிரசும், இடதுசாரி கட்சிகளும் ஏற்றுக் கொள்கின்றவா என்றும் திரு. நயினார் நாகேந்திரன் வினவியுள்ளார்.

>>>>><<<<<

சென்னை திருவான்மியூர் - உத்தண்டி உயர்மட்ட சாலை அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதுகுறித்து சிபிஐ விசாரணைக்கு தமிழக அரசு உத்தரவிட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

டாஸ்மாக் பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவது தொடர்பாக, முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் நேரடியாக தலையிட்டு, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இடதுசாரி கட்சிகளும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

இதுதொடர்பாக அக்கட்சித் தலைவர்கள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில், போராடும் டாஸ்மாக் பணியாளர்கள், பகுதிநேர ஆசிரியர்கள், சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்களை, அரசுக்கு எதிரானவர்கள் என்று எதிர்மறையாக அணுகக்கூடாது என்று வலியுறுத்தியுள்ளனர்.

>>>>><<<<<

சர்வதேச புற்றுநோய் தடுப்பு தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது.

இதனையொட்டி, நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் விழிப்புணர்வு பேரணிகளும் நடைபெற்றன.

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் மற்றும் சேந்தமங்கலம் பகுதிகளில் ஒன்பது கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாநில அமைச்சர் திரு. மதிவேந்தன் இன்று வழங்கினார்.

>>>>><<<<<

பெரம்பலூர் மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை மாநில அமைச்சர் திரு. சிவசங்கர் இன்று வழங்கினார்.

>>>>><<<<<

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட அடையாறு மண்டலத்தில், 40 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மகளிர் உடற்பயிற்சி கூடத்தினை மாநில அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் இன்று திறந்து வைத்தார்.

>>>>><<<<<

வேலூர் மாவட்டத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் குறித்து அதற்கான பார்வையாளர் திரு. தீபக் ஜேக்கப் தலைமையில், அனைத்து கட்சி பிரதிநிதிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

மதுரையில் நறுமணப் பொருட்களுக்கான நுகர்வோர் விற்பனையாளர் சந்திப்புக் கூட்டம் இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில், 3 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி. சிவசௌந்தரவள்ளி இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

>>>>><<<<<

கன்னியாகுமரி மாவட்டம், பொன்மனை, மாரிக்கோணம் ஸ்ரீதர்மசாஸ்தா கோவில் கும்பாபிஷேகம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இன்று, இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின், மகளிர் 10 மீட்டர் பிரிவில் Esha Singh தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் 10 மீட்டர் குழுப்பிரிவில் தங்கப்பதக்கத்தையும், ஆடவர் 10 மீட்டர் குழுப்பிரிவில் வெள்ளிப்பதக்கத்தையும் இந்தியா வென்றது.

ஆடவர் 10 மீட்டர் பிரிவில் Samrat Rana வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>><<<<<

19 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய மகளிர் கால்பந்து சாம்பியன் போட்டியில், இந்தியா 8-0 என்ற கோல்கணக்கில் பூட்டானை வென்றது.

நேபாளத்தின் Pokhara-வில் நடைபெற்ற இப்போட்டியில், Pearl Fernandas ஹாட்ரிக் கோல் அடித்தார்.

>>>>><<<<<

*தோஹாவில் நடைபெற்ற ஆசிய ஸ்னூக்கர் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் பங்கஜ் அத்வானி வெள்ளிப்பதக்கம் வென்றார்.*

*>>>>><<<<<*

*19 வயதுக்குட்பட்டோருக்கான உலக கோப்பை கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக 311 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்து வரும் இந்தியா சற்றுமுன்வரை 19 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 150 ரன் எடுத்துள்ளது.*

*ஹராரே-யில் நடைபெற்று வரும் இப்போட்டியில், டாஸ் வென்று முதலில் பேட் செய்த ஆப்கானிஸ்தான், நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 310 ரன் எடுத்தது.*

*>>>>><<<<<*

*உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா - தென்னாப்பிரிக்கா இடையேயான பயிற்சி ஆட்டம் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.*

*நவிமும்பையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது.*

*>>>>><<<<<*

*Cappadocia சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Divyanshi Bhowmick - Syndrela Das இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், இந்த இணை 5-11, 12-10, 11-7, 12-10 என்ற செட்கணக்கில் ரஷ்யாவின் Valeria Kotsiur - Valeria Shcherbatyki இணையை வென்றது.*

*மகளிர் ஒற்றையர் பிரிவில் Divyanshi Bhowmick காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>><<<<<*